**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்றக்கூட்டம்**
**11.04.2022 திங்கட்கிழமை நடைபெற்ற நகர்மன்ற கூட்ட தீர்மான நகல்**

---

**தீர்மானம்: 1**

**நகர்மன்ற தலைவர் திருமதி. க. சகுந்தலா அவர்களால்**
**கொண்டுவரப்பெறும் தீர்மானம்**

**மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின்** அவர்கள் தமிழகத்தில் முதல் முறையாக முதல்வராக பதவி ஏற்றமைக்கும் தமிழக மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் அறிவித்தமைக்கும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றமைக்கு நன்றியை இந்த நகர்மன்றம் தெரிவித்துக்கொள்கிறது.

**மாண்புமிகு டாக்டர் கலைஞர் அய்யா திரு. மு. கருணாநிதி** அவர்களுக்கு உசிலம்பட்டி நகர்பகுதி முக்கிய இடத்தில் திருவுருவ சிலை அமைப்பதற்கு தீர்மானம் கொண்டு வரப்பெற்றது.

---

**மன்றப்பொருள்: 1**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி, காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் உசிலம்பட்டி நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி **(Current Liabilities)** (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 1.07 |
| 2 | DTCP கடன் நிலுவைத்தொகை | 1.51 |
| 3 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 0.70 |
| | **மொத்தம்** | **3.28** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், 01.04.2022 முதல் புதிதாக வரிநிர்யணம் செய்யப்படும் சொத்துவரி மற்றும் காலிமனை வரி கீழ்க்கண்ட விபரப்படி மண்டல மதிப்பீட்டின் அடிப்படையில் வரி நிர்ணயம் செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**மண்டல மதிப்பீடு (சொத்துவரி) – 01.04.2022 முதல் உயர்வு செய்யப்பட வேண்டிய சொத்துவரி வரிநிர்ணயம் உயர்வு சதவீதம்**

| மண்டலம் | தற்போதைய மதிப்பு (ரூபாய்) | 600 சதுரஅடி மற்றும் 600 சதுரஅடிக்கு குறைவாக உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25 சதவீதம் வரிஉயர்வு (ரூபாய்) | 600 சதுரஅடி முதல் 1200 சதுரஅடி உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவீதம் வரிஉயர்வு (ரூபாய்) | 1201 சதுரஅடி முதல் 1800 சதுரஅடி உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 75 சதவீதம் வரிஉயர்வு (ரூபாய்) | 1800 சதுரஅடிக்கு மேல் உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100 சதவீதம் வரிஉயர்வு (ரூபாய்) | தொழிற்சாலைகள் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கட்டிடங்களுக்கு 75 சதவீதம் வரி உயர்வு (ரூபாய்) | வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு 100 சதவீதம் வரி உயர்வு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| A | 1.00 | 1.25 | 1.50 | 1.75 | 2.00 | 1.75 | 2.00 |
| B | 0.80 | 1.00 | 1.20 | 1.40 | 1.60 | 1.40 | 1.60 |
| C | 0.60 | 0.75 | 0.90 | 1.05 | 1.20 | 1.05 | 1.20 |
| D | 0.50 | 0.63 | 0.75 | 0.88 | 1.00 | 0.88 | 1.00 |

**மண்டல மதிப்பீடு (காலியிடவரி)**

| மண்டலம் | இரண்டாம் நிலை நகராட்சியில் காலிமனை வரி நிர்ணயம் தொகை (ரூபாய்) | தற்போது காலிமனை வரி பொது சீராய்வின்படி 01.04.2022 முதல் நிர்ணயம் செய்யப்படும் தொகை சதுரஅடிக்கு (ரூபாய்) |
|---|---|---|
| A | 0.10 | 0.20 |
| B | 0.15 | 0.30 |
| C | 0.20 | 0.40 |

**வார்டு வாரியாக தெருக்கள் மற்றும் மண்டலங்களின் விபரம்**

| Sl. No. | Street Code | Street Name Tamil | Zone (A / B/ C) |
|---|---|---|---|
| WardName:WARD-01 | | | |
| 1 | 01 | அரண்மனை தெரு | C |
| 2 | 02 | அரிஜன் தெரு- 1 | C |
| 3 | 03 | அரிஜன் தெரு- 2 | C |
| 4 | 04 | அரிஜன் தெரு- 3 | C |
| 5 | 05 | கழுவத்தேவர் தெரு | C |
| 6 | 06 | கயம்பு தேவர் தெரு | C |
| 7 | 07 | மாமரத்துபட்டி மெயின்ரோடு | B |
| 8 | 08 | மந்தை தெரு (மாமரத்துபட்டி) | C |
| 9 | 09 | நாகத்தேவர் தெரு | C |
| 10 | 10 | ஒச்சாத்தேவர் தெரு | C |
| 11 | 11 | தலையாரி அழகர்சாமி தெரு | C |
| 12 | 12 | வெள்ளையத்தேவர் தெரு | C |
| 13 | 13 | மாமரத்துபட்டி | C |
| 14 | 14 | மாமரத்துப்பட்டி காலனி ரோடு | C |
| 15 | 15 | மாமரத்துப்பட்டி மேற்கு 1-வது தெரு | B |
| 16 | 16 | மாமரத்துப்பட்டி மேற்கு 2-வது தெரு | B |
| 17 | 17 | மாமரத்துப்பட்டி மேற்கு 3-வது தெரு | B |

| | | | |
|---|---|---|---|
| 18 | 18 | மாமரத்துப்பட்டி மேற்கு 4-வது தெரு | B |
| 19 | 19 | மாமரத்துப்பட்டி மேற்கு-ஒச்சாத்தேவர் தெரு | B |
| 20 | 20 | சோலைநகர் 1-வது தெரு | B |
| 21 | 21 | சோலைநகர் 2-வது தெரு | B |
| 22 | 22 | சோலைநகர் 3-வது தெரு | B |
| 23 | 23 | அரிஜன் மந்தை | C |
| **WardName:WARD-02** | | | |
| 1 | 01 | கோஸ்ராவுத்தர்தெரு - 1 | B |
| 2 | 02 | கோஸ்ராவுத்தர் தெரு-2 | B |
| 3 | 03 | குருசாமிநாடார் தெரு | B |
| 4 | 04 | கருப்பையா நாடார் சந்து | A |
| 5 | 05 | நாடார் உறவின்முறை தெரு | A |
| 6 | 06 | டி.பி.பி. ரோடு | A |
| 7 | 07 | தேனி ரோடு | B |
| 8 | 08 | மாமரத்துபட்டி மெயின் ரோடு | B |
| 9 | 09 | கோஸ்ராவுத்தர் தெரு-3 | B |
| 10 | 10 | ஹவுசிங் போர்டு காலனி | A |
| **WardName:WARD-03** | | | |
| 1 | 01 | கருப்பண ஆசாரி தெரு | B |
| 2 | 02 | மாமரத்துபட்டி மெயின் ரோடு | B |
| 3 | 03 | தேனி ரோடு | A |
| 4 | 04 | சீத்தாத்தேவர் தெரு | A |
| 5 | 05 | பட்டறை குறுக்குத்தெரு | A |
| 6 | 06 | பட்டறை குறுக்குத்தெரு - 2 | A |
| 7 | 07 | பட்டறை குறுக்குத்தெரு - 3 | A |
| 8 | 08 | நுல் ஆபிஸ் தெரு | A |
| 9 | 09 | தேனி ரோடு 2-வது தெரு | A |
| 10 | 10 | கண்மார்க் ஊறுகாய் கம்பெனி தெரு | A |
| 11 | 11 | பிரணவ் மஹால் தெரு | A |
| 12 | 12 | காளைத்தேவர் 1-வது தெரு | A |
| 13 | 13 | காளைத்தேவர் 2-வது தெரு | A |
| 14 | 14 | காளைத்தேவர் மேற்குத்தெரு-1 | A |
| 15 | 15 | காளைத்தேவர் மேற்குத்தெரு-2 | A |
| 16 | 16 | கலாம் நகர் | A |
| 17 | 17 | கலாம் நகர் குறுக்குத்தெரு | A |
| 18 | 18 | புதிய அலுவலகக்கட்டிடம் ரோடு | A |
| 19 | 19 | புதிய அலுவலகக்கட்டிடம் குறுக்குத்தெரு | A |
| 20 | 20 | நாஞ்சில்நகர் மெயின் ரோடு | A |
| 21 | 21 | நாஞ்சில்நகர் வடக்கு 1-வது தெரு | A |

| | | | |
|---|---|---|---|
| 22 | 22 | நாஞ்சில்நகர் வடக்கு 2-வது தெரு | A |
| 23 | 23 | நாஞ்சில்நகர் தெற்கு 1-வது தெரு | A |
| 24 | 24 | நாஞ்சில்நகர் தெற்கு 2-வது தெரு | A |
| **WardName:WARD-04** | | | |
| 1 | 01 | சின்னச்சாமி கோவில் தெரு | A |
| 2 | 02 | துரைச்சாமி அய்யர் தெரு (மேற்கு) | A |
| 3 | 03 | முருகன் கோவில் தெரு (கிழக்கு) | A |
| 4 | 04 | பெருமாள் நாயக்கர் தெரு | A |
| 5 | 05 | எஸ்.பி,வடிவேல் தெரு | A |
| 6 | 06 | எஸ்.வி.பி. நடராஜநாடார் தெரு | A |
| 7 | 07 | தேனி ரோடு | A |
| 8 | 08 | விநாயகர் கோவில் தெரு (தெற்கு) | A |
| 9 | 09 | டி.இ.ஒ.ஆபிஸ் தெரு | A |
| 10 | 10 | முஸ்லிம் தெரு | A |
| 11 | 11 | எஸ்.வி.பி.நடராஜநாடார் தெரு | A |
| 12 | 12 | டி.பி.பெரியசாமி நாடார் தெரு | A |
| 13 | 13 | கருக்கட்டான்பட்டி ரோடு | A |
| 14 | 14 | ராஜாராணி நகர் | A |
| 15 | 15 | மண்ணெண்ணெய் குடோன் 1-வது தெரு | A |
| 16 | 16 | மண்ணெண்ணெய் குடோன் 2-வது தெரு | A |
| 17 | 17 | மண்ணெண்ணெய் குடோன் 3-வது தெரு | A |
| 18 | 18 | மண்ணெண்ணெய் குடோன் 4-வது தெரு | A |
| 19 | 19 | மண்ணெண்ணெய் குடோன் 5-வது தெரு | A |
| 20 | 20 | மண்ணெண்ணெய் குடோன் 6-வது தெரு | A |
| 21 | 21 | மண்ணெண்ணெய் குடோன் 7-வது தெரு | A |
| 22 | 22 | சின்னச்சாமிகோவில் குறுக்குத்தெரு | A |
| 23 | 23 | பால்பண்ணை தெரு | A |
| 24 | 24 | சின்னச்சாமிகோவில் 1-வது தெரு | A |
| 25 | 25 | சின்னச்சாமிகோவில் 2-வது தெரு | A |
| 26 | 26 | சின்னச்சாமிகோவில் 3-வது தெரு | A |
| **WardName:WARD-05** | | | |
| 1 | 01 | துரைச்சாமி அய்யர் தெரு (கிழக்கு) | A |
| 2 | 02 | காளியம்மன் கோவில் தெரு | A |
| 3 | 03 | முருகன் கோவில் தெரு (கிழக்கு) | A |
| 4 | 04 | முஸ்லிம் தெரு | A |
| 5 | 05 | விநாயகர் கோவில் தெரு (வடக்கு) | A |
| 6 | 06 | தேனி ரோடு (தெற்கு) | A |
| 7 | 07 | எஸ்.வி.பி.நடராஜ் நாடார் தெரு | A |
| 8 | 08 | இருளப்பன் கோவில் தெரு | A |
| 9 | 09 | சத்திரம் தெரு | A |

| | | | |
|---|---|---|---|
| **WardName:WARD-06** | | | |
| 1 | 01 | சத்திர தெரு | A |
| 2 | 02 | டி.இ.ஒ.ஆபிஸ் தெரு | A |
| 3 | 03 | கிராமசாவடி தெரு | A |
| 4 | 04 | முருகன் கோவில் தெரு | A |
| 5 | 05 | பேரையூர் ரோடு | A |
| 6 | 06 | தேனி ரோடு | A |
| 7 | 07 | அக்ரஹார தெரு | A |
| 8 | 08 | காளியம்மன் கோவில் தெரு | A |
| 9 | 09 | முஸ்லிம் தெரு | A |
| 10 | 10 | துரைச்சாமி அய்யர் தெரு | A |
| 11 | 12 | எருமைக்காரன் தெரு | A |
| 12 | 13 | அரசுப்பள்ளி தெரு | A |
| 13 | 19 | பேருந்து நிலையம் | A |
| **WardName:WARD-07** | | | |
| 1 | 01 | போர்டு மேல்நிலைப்பள்ளி தெரு | B |
| 2 | 02 | கே,பி.எம். குப்பாஞ்செட்டியார் தெரு | B |
| 3 | 03 | போலீஸ் லைன் தெரு-1 | B |
| 4 | 04 | போலீஸ் லைன் தெரு-2 | B |
| 5 | 05 | ராமநாடார் தெரு | B |
| 6 | 06 | காளியம்மன் கோவில் தெரு-1 | B |
| 7 | 07 | கருக்கட்டான்பட்டி ரோடு | B |
| 8 | 08 | மீனாட்சியம்மன் காம்பவுண்ட் தெரு | B |
| 9 | 09 | நாகம்மாள்கோவில் மெயின் ரோடு | B |
| 10 | 10 | நாகம்மாள்கோவில் 1-வது தெரு | B |
| 11 | 11 | நாகம்மாள்கோவில் 2-வது தெரு | B |
| 12 | 12 | நாகம்மாள்கோவில் 3-வது தெரு | B |
| 13 | 13 | நாகம்மாள்கோவில் 4-வது தெரு | B |
| 14 | 14 | நாகம்மாள்கோவில் 5-வது தெரு | B |
| 15 | 15 | நாகம்மாள்கோவில் 6-வது தெரு | B |
| 16 | 16 | எம்.ஜி.ஆர். நகர் மெயின் ரோடு | B |
| 17 | 17 | பாக்கியாநகர் 1-வது தெரு | B |
| 18 | 18 | பாக்கியாநகர் 2-வது தெரு | B |
| 19 | 19 | பாக்கியாநகர் 3-வது தெரு | B |
| 20 | 20 | பாக்கியாநகர் 4-வது தெரு | B |
| 21 | 21 | பாக்கியாநகர் 5-வது தெரு | B |
| 22 | 22 | பாக்கியாநகர் 6-வது தெரு | B |
| 23 | 23 | பாக்கியாநகர் 7-வது தெரு | B |
| 24 | 24 | பாக்கியாநகர் 8-வது தெரு | B |
| 25 | 25 | பாக்கியாநகர் 9-வது தெரு | B |

| | | | |
|---|---|---|---|
| 26 | 26 | பாக்கியாநகர் 10-வது தெரு | B |
| 27 | 27 | பாக்கியாநகர் 11-வது தெரு | B |
| 28 | 28 | பாக்கியாநகர் 12-வது தெரு | B |
| 29 | 29 | ஜே.பி.ஆர். மஹால் தெரு | B |
| 30 | 30 | ஜே.பி.ஆர். மஹால் 1-வது தெரு | B |
| 31 | 31 | ஜே.பி.ஆர். மஹால் 2-வது தெரு | B |
| 32 | 32 | ஜே.பி.ஆர். மஹால் 3-வது தெரு | B |
| 33 | 33 | ஜே.பி.ஆர். மஹால் 4-வது தெரு | B |
| 34 | 34 | டி.இ.ஒ. ஆபீஸ் தெரு | B |
| **WardName:WARD-08** | | | |
| 1 | 01 | மொக்கையன் இருளப்பதேவர் தெரு | C |
| 2 | 02 | காளியம்மன்கோவில் தெரு-1 | D |
| 3 | 03 | காளியம்மன் கோவில் தெரு-2 | D |
| 4 | 04 | கருக்கட்டான்பட்டி மெயின் ரோடு | C |
| 5 | 05 | மொக்கையன் ராசப்பதேவர் தெரு | C |
| 6 | 06 | சடாச்சரம் தெரு | D |
| 7 | 07 | சுப்பிரமணி தெரு | C |
| 8 | 08 | ஹரிஜன் காலனி தெரு | D |
| 9 | 09 | சின்னச்சாமிகோவில் 4-வது தெரு | C |
| 10 | 10 | சின்னச்சாமிகோவில் 5-வது தெரு | C |
| 11 | 11 | ராசுசெட்டியார் தெரு | C |
| 12 | 12 | ராசுசெட்டியார் 1-வது தெரு | C |
| 13 | 13 | ராசுசெட்டியார் 2-வது தெரு | C |
| 14 | 14 | ராசுசெட்டியார் 3-வது தெரு | C |
| 15 | 15 | ராசுசெட்டியார் 4-வது தெரு | C |
| 16 | 16 | ராசுசெட்டியார் 5-வது தெரு | C |
| 17 | 17 | வீரணத்தேவர் மெயின் ரோடு | C |
| 18 | 18 | வீரணத்தேவர் 1-வது தெரு | C |
| 19 | 19 | மந்தை மெயின் தெரு | C |
| **WardName:WARD-09** | | | |
| 1 | 01 | ஆண்டித்தேவர் தெரு (கருக்கட்டான்பட்டி) | C |
| 2 | 02 | செல்லையாபிள்ளை தெரு | C |
| 3 | 03 | சிதம்பரம் செட்டியார் தெரு | C |
| 4 | 04 | சிதம்பரம் பூசாரி தெரு | C |
| 5 | 05 | சின்னகாமத்தேவர் தெரு | C |
| 6 | 06 | சின்ன வீரணத்தேவர் தெரு | C |
| 7 | 07 | குருநாதன் கோவில் தெரு | C |
| 8 | 08 | குருசாமி செட்டியார் தெரு | C |

| | | | |
|---|---|---|---|
| 9 | 09 | கணக்குபிள்ளை தெரு | C |
| 10 | 10 | கருப்பதேவர் தெரு | C |
| 11 | 11 | கருப்பபிள்ளை தெரு | C |
| 12 | 12 | கோழிவீரத்தேவர் தெரு | C |
| 13 | 13 | மாரியம்மன் கோவின் தெரு | C |
| 14 | 14 | நல்லபெருமாள் தெரு | C |
| 15 | 15 | பட்டிமாயாண்டித்தேவர் தெரு | C |
| 16 | 16 | பெரியனத்தேவர் தெரு | C |
| 17 | 17 | பூசாரி ஒச்சாத்தேவர் தெரு | C |
| 18 | 18 | ரெங்கநாயகம்பிள்ளை தெரு | C |
| 20 | 19 | சுண்டக்காயன் தெரு | C |
| 21 | 20 | விநாயகர்கோவில் தெரு (கருக்கட்டான் பட்டி) | C |
| 22 | 21 | கருக்கட்டான்பட்டி மெயின் ரோடு | C |
| 23 | 22 | இருளப்பதேவர் தெரு | C |
| 24 | 23 | பால்பண்ணை தெரு | C |
| 25 | 24 | சுப்பிரமணி தெரு | C |
| 26 | 25 | காளியம்மன்கோவில் தெரு | C |
| 27 | 26 | காளியம்மன்கோவில் 1-வது தெரு | C |
| 28 | 27 | காளியம்மன்கோவில் 2-வது தெரு | C |
| 29 | 28 | தியாகி சொக்கர்தேவர் தெரு | C |
| 30 | 29 | அரண்மனை கிணற்றுத்தெரு | C |
| 31 | 30 | மந்தை தெரு | C |
| 32 | 31 | மந்தை 1-வது தெரு | C |
| 33 | 32 | சின்னகாயன் தெரு | C |
| 34 | 33 | சின்னகாயன் 1-வது தெரு | C |
| 35 | 34 | மயானம் சாலை | C |
| 36 | 35 | தேவர்சிலை சாலை | C |
| **WardName:WARD-10** | | | |
| 1 | 01 | பேரையூர் ரோடு (மேற்கு) | A |
| 2 | 02 | போஸ்ட் ஆபிஸ் தெரு | A |
| 3 | 03 | ரெத்தினசாமி தேவர் தெரு | A |
| 4 | 04 | சங்கரமூர்த்தியாபிள்ளை தெரு | A |
| 5 | 05 | சிவன்காளைத்தேவர் தெரு | A |
| 6 | 06 | வில்லாணிசாலை மெயின் ரோடு | A |
| 7 | 07 | வில்லாணிச்சாலை 1-வது தெரு | A |
| 8 | 08 | வில்லாணிச்சாலை 2-வது தெரு | A |
| 9 | 09 | வில்லாணிச்சாலை 3-வது தெரு | A |
| 10 | 10 | வில்லாணிச்சாலை 3-வது தெரு - குறுக்குத்தெரு-1 | A |
| 11 | 11 | வில்லாணிச்சாலை 3-வது தெரு - குறுக்குத்தெரு-2 | A |
| 12 | 12 | வில்லாணிச்சாலை 3-வது தெரு - குறுக்குத்தெரு-3 | A |

| | | | |
|---|---|---|---|
| 13 | 13 | வில்லாணிச்சாலை 4-வது தெரு | A |
| 14 | 14 | வில்லாணிச்சாலை 5-வது தெரு | A |
| 15 | 15 | வில்லாணிச்சாலை 6-வது தெரு | A |
| 16 | 16 | வில்லாணிச்சாலை 7-வது தெரு | A |
| 17 | 17 | வில்லாணிச்சாலை 8-வது தெரு | A |
| 18 | 18 | வில்லாணிச்சாலை 9-வது தெரு | A |
| 19 | 19 | வில்லாணிச்சாலை 10-வது தெரு | A |
| 20 | 20 | வில்லாணிச்சாலை 11-வது தெரு | A |
| 21 | 21 | வில்லாணிச்சாலை 12-வது தெரு | A |
| 22 | 22 | ஒத்தப்பட்டி சாலை மெயின் ரோடு | A |
| 23 | 23 | ஒத்தப்பட்டி சாலை மெயின் 2-வது ரோடு | A |
| 24 | 24 | ஒத்தப்பட்டிசாலை 1-வது தெரு | A |
| 25 | 25 | ஒத்தப்பட்டிசாலை 2-வது தெரு | A |
| 26 | 26 | ஒத்தப்பட்டிசாலை 3-வது தெரு | A |
| 27 | 27 | ஒத்தப்பட்டிசாலை 4-வது தெரு | A |
| 28 | 28 | ஒத்தப்பட்டிசாலை 5-வது தெரு | A |
| 29 | 29 | ஒத்தப்பட்டிசாலை 6-வது தெரு | A |
| 30 | 30 | சுண்ணாம்பு காளவாசல் தெரு | A |
| 31 | 31 | கனராவங்கி தெரு | A |
| 32 | 32 | கனராவங்கி 1-வது தெரு | A |
| 33 | 33 | கனராவங்கி 2-வது தெரு | A |
| 34 | 34 | குமரன் மருத்துவமனை தெரு | A |
| 35 | 35 | பி.எம்.டி. மெயின் ரோடு | A |
| 36 | 36 | பி.எம்.டி. நகர் 1-வது தெரு | A |
| 37 | 37 | பி.எம்.டி. நகர் 2-வது தெரு | A |
| 38 | 38 | பி.எம்.டி. நகர் 3-வது தெரு | A |
| 39 | 40 | பி.எம்.டி. சாலை-மருத்துவமனை ரோடு | A |
| 40 | 41 | பி.எம்.டி. நகர் நீட்டிப்பு சாலை | A |
| 41 | 42 | வில்லாணிச்சாலை கிழக்குத்தெரு- குறுக்குத்தெரு-2 | A |
| 42 | 43 | காப்பகம் ரோடு | A |
| 43 | 44 | காப்பகம் ரோடு-குறுக்குத்தெரு-1 | A |
| 44 | 45 | காப்பகம் ரோடு-குறுக்குத்தெரு-2 | A |
| 45 | 46 | காப்பகம் ரோடு-குறுக்குத்தெரு-3 | A |
| 46 | 47 | பி.எம்.டி நகர் தெற்கு குறுக்குத்தெரு | A |
| 47 | 48 | குஞ்சாவீரணத்தேவர் தெரு | A |
| 48 | 49 | வீரணத்தேவர் தெரு | A |
| 49 | 50 | குஞ்சா வீரணத்தேவர் 1-வது தெரு | A |
| 50 | 51 | குஞ்சா வீரணத்தேவர் 2-வது தெரு | A |
| 51 | 52 | நோவா ஹோட்டல் தெரு | A |

| | | | |
|---|---|---|---|
| 52 | 53 | கோடாங்கி குமாரத்தேவர் தெரு | A |
| **WardName:WARD-11** | | | |
| 1 | 01 | துரைச்சாமிதேவர் தெரு | C |
| 2 | 02 | கருத்தஒச்சாதேவர் தெரு | C |
| 3 | 03 | பி.டபிள்யூ.டி. தெரு | B |
| 4 | 04 | பெரியசாமி தெரு | C |
| 5 | 05 | ரயில்வே பீடர் ரோடு | A |
| 6 | 06 | வீரபுத்திரகோவில் தெரு | C |
| 7 | 07 | வடகாட்டுபட்டி மெயின் ரோடு | B |
| 8 | 08 | முனியாண்டிபிள்ளை தெரு | C |
| 9 | 09 | கோவில் தளம் | C |
| 10 | 10 | சின்னப்பூசாரி தெரு-1 | C |
| 11 | 11 | அய்யன்காளை தெரு | C |
| **WardName:WARD-12** | | | |
| 1 | 01 | அய்யனார் கோவில் தெரு | B |
| 2 | 02 | சி.ஒச்சாதேவர் தெரு | B |
| 3 | 03 | சின்னபூசாரி தெரு | B |
| 4 | 04 | ஹரிஜன் தெரு | B |
| 5 | 05 | காசிமாயன் தெரு | B |
| 6 | 06 | மொக்கராஜ் தெரு | B |
| 7 | 07 | முனியான்டிபிள்ளை தெரு | B |
| 8 | 08 | பிச்சை தெரு | B |
| 9 | 09 | ஒச்சாதேவர் தெரு | B |
| 10 | 10 | வத்தலகுண்டு ரோடு | A |
| 11 | 11 | விநாயகர் கோவில் தெரு | B |
| 12 | 12 | விநாயகர் கோவில் 1-வது தெரு | B |
| 13 | 13 | ஊரணிமேடு தெரு | C |
| 14 | 14 | ஊரணிமேடு 1-வது தெரு | C |
| 15 | 15 | நீராவிமேடு தெரு | C |
| 16 | 16 | நீராவிமேடு 1-வது தெரு | C |
| 17 | 17 | நீராவிமேடு 2-வது தெரு | C |
| 18 | 18 | நீராவிமேடு 3-வது தெரு | C |
| 19 | 19 | கண்மாய் ரோடு | B |
| **WardName:WARD-13** | | | |
| 1 | 01 | மதுரை ரோடு (வடக்கு) | A |
| 2 | 02 | முகைதீன் தெரு | B |
| 3 | 03 | முத்தாலம்மன் கோவில் தெரு | B |
| 4 | 04 | முத்துராவுத்தர் தெரு | B |

| | | | |
|---|---|---|---|
| 5 | 05 | நாகூர் மீராவுத்தர் தெரு | B |
| 6 | 06 | பள்ளிவாசல் தெரு | A |
| 7 | 07 | பேரையூர் ரோடு (வத்தலகுண்டு ரோடு) | A |
| 8 | 08 | பெருமாள்கோவில் தெரு (மதுரை ரோடு வடக்கு) | B |
| 9 | 09 | சங்கரலிங்கம் செட்டியார் தெரு | B |
| 10 | 10 | சப் ரெஜிஸ்டர் ஆபிஸ் சந்து | A |
| 11 | 11 | முஸ்லிம் தெரு | B |
| 12 | 12 | வத்தலகுண்டு ரோடு | A |
| 13 | 13 | எஸ்.ஒ.ஆர். நகர் | A |
| 14 | 14 | அங்கம்மாள் ரைஸ்மில் 1-வது தெரு | A |
| 15 | 15 | அங்கம்மாள் ரைஸ்மில் 2-வது தெரு | A |
| **WardName:WARD-14** | | | |
| 1 | 01 | சின்னபூசாரி தெரு | B |
| 2 | 02 | இருளப்பதேவர்தெரு(ம.ரோடுவடக்கு) | A |
| 3 | 03 | கள்ளர் தெரு(மதுரைரோடுவடக்கு) | B |
| 4 | 04 | மாயாண்டி தேவர் தெரு | B |
| 5 | 05 | பெரியபூசாரி தெரு | B |
| 6 | 06 | மதுரை ரோடு | A |
| 7 | 07 | சத்தியாநகர் | A |
| 8 | 08 | எல்.ஐ.சி. ஆபீஸ் தெரு | A |
| 9 | 09 | தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி தெரு | A |
| 10 | 10 | சந்தனமாரியம்மன்கோவில் தெரு | B |
| 11 | 11 | பாண்டிகோவில் மெயின் தெரு | B |
| 12 | 12 | பாண்டிகோவில் மெயின் 1-வது தெரு | B |
| 13 | 14 | பாண்டிகோவில் மெயின் 2-வது தெரு | B |
| 14 | 15 | பாண்டிகோவில் மெயின் 3-வது தெரு | B |
| 15 | 16 | பாண்டிகோவில் மெயின் 4-வது தெரு | B |
| 16 | 17 | போஸ் போர்வெல் தெரு | A |
| 17 | 18 | சசிவீரணத்தேவர் தெரு | A |
| 18 | 19 | சசிவீரணத்தேவர் 1-வது தெரு | A |
| 19 | 20 | சசிவீரணத்தேவர் 2-வது தெரு | A |
| 20 | 21 | ஜோதிமஹால் தெரு | A |
| 21 | 22 | மதுரைரோடு வடக்குத்தெரு | A |
| 22 | 23 | ஆச்சி ஒச்சாயி நகர் | A |
| 23 | 24 | மதுரைரோடு வடக்கு 2-வது தெரு | A |
| 24 | 25 | நேதாஜி நகர் | A |
| 25 | 26 | அப்துல்கலாம் நகர் | A |
| 26 | 27 | அப்துல்கலாம் நகர் 1-வது தெரு | A |
| 27 | 28 | அப்துல்கலாம் நகர் 2-வது தெரு | A |

| | | | |
|---|---|---|---|
| 28 | 29 | அப்துல்கலாம் நகர் 3-வது தெரு | A |
| 29 | 30 | சொசைட்டி தெரு | A |
| 30 | 31 | சொசைட்டி 1-வது தெரு | A |
| 31 | 32 | சொசைட்டி 2-வது தெரு | A |
| 32 | 33 | சொசைட்டி 3-வது | A |
| 33 | 34 | சொசைட்டி 4-வது தெரு | A |
| 34 | 35 | சொசைட்டி 5-வது தெரு | A |
| **WardName:WARD-15** | | | |
| 1 | 01 | மதுரை ரோடு-2 (நேதாஜி நகர்) | A |
| 2 | 02 | சத்யாநகர் 1-வது தெரு | A |
| 3 | 03 | சத்யாநகர் 2-வது தெரு | A |
| 4 | 04 | சத்யாநகர் 3-வது தெரு | A |
| 5 | 05 | சத்யாநகர் 4-வது தெரு | A |
| 6 | 06 | சத்யாநகர் 5-வது தெரு | A |
| 7 | 07 | சத்யாநகர் 6-வது தெரு | A |
| 8 | 08 | சத்யாநகர் 7-வது தெரு | A |
| 9 | 09 | சத்யாநகர் 7-வது தெரு- குறுக்குத்தெரு-1 | A |
| 10 | 10 | சத்யாநகர் 7-வது தெரு- குறுக்குத்தெரு-2 | A |
| 11 | 11 | காமாட்சியம்மன் கோவில் தெரு | A |
| 12 | 12 | பெட்ரோல் பங்க் தெரு | A |
| 13 | 13 | பூக்கார தெரு | A |
| 14 | 14 | வீராமஹால் தெரு | A |
| 15 | 15 | மலையாண்டி தியேட்டர் தெரு | A |
| 16 | 16 | மலையாண்டி தியேட்டர் 1-வது தெரு | A |
| 17 | 17 | மலையாண்டி தியேட்டர் 2-வது தெரு | A |
| 18 | 18 | மலையாண்டி தியேட்டர் 3-வது தெரு | A |
| **WardName:WARD-16** | | | |
| 1 | 01 | ஆவடைதங்கநாடார் தெரு (கிழக்கு) | B |
| 2 | 02 | மதுரை ரோடு-3 | A |
| 3 | 03 | நாராயணன் தெரு | B |
| 4 | 04 | ஒச்சாதேவர் தெரு | B |
| 5 | 05 | பெரியமாயாண்டிதேவர் தெரு | B |
| 6 | 06 | சன்னாசிதேவர் தெரு | B |
| 7 | 07 | சிவன்காளைத்தேவர் தெரு | B |
| 8 | 08 | வி.எம். தெரு | B |
| 9 | 09 | வைரவன் கோவில் தெரு | A |
| 10 | 10 | காளியம்மன்கோவில் தெரு | B |
| 11 | 11 | காளியம்மன்கோவில் மெயின் தெரு | B |
| 12 | 12 | காளியம்மன்கோவில் குறுக்குத்தெரு | B |

| | | | |
|---|---|---|---|
| 13 | 13 | ஆனந்தாநகர் 2-வது தெரு | B |
| 14 | 14 | ஆனந்தாநகர் 3-வது தெரு | B |
| 15 | 15 | ஆனந்தாநகர் 3-வது தெரு- குறுக்குத்தெரு-1 | B |
| 16 | 16 | ஆனந்தாநகர் 4-வது தெரு | B |
| 17 | 17 | தர்மசாஸ்தா நகர் | B |
| 18 | 18 | பாண்டிகோவில் மெயின் ரோடு | B |
| **WardName:WARD-17** | | | |
| 1 | 01 | வி.கே.எஸ். தெரு | B |
| 2 | 02 | ஹரிஜன் பள்ளி தெரு | B |
| 3 | 03 | முத்துகிருஷ்ணஆசாரி தெரு | B |
| 4 | 04 | வீரபுத்திரநாடார் தெரு | B |
| 5 | 05 | மதுரை ரோடு | A |
| 6 | 06 | பாண்டிகோவில் தெரு | B |
| 7 | 07 | பாண்டிகோவில் 1-வது தெரு | B |
| 8 | 08 | பாண்டிகோவில் 2-வது தெரு | B |
| 9 | 09 | அரிஜன் 1-வது தெரு | D |
| 10 | 10 | அரிஜன் 2-வது தெரு | D |
| 11 | 11 | நாடார் புதுத்தெரு | B |
| **WardName:WARD-18** | | | |
| 1 | 01 | ஆவடைச்செட்டியார் தெரு | B |
| 2 | 02 | குருநாதன் செட்டியார் தெரு | B |
| 3 | 03 | கள்ளர் தெரு | B |
| 4 | 04 | மதுரை ரோடு (தெற்கு) | A |
| 5 | 05 | மலையாண்டிதேவர் தெரு | B |
| 6 | 06 | மந்தை தெரு (மதுரைரோடு தெற்கு) | B |
| 7 | 07 | மோலையத்தேவர் தெரு | B |
| 8 | 08 | சுப்பன்செட்டியார் தெரு | B |
| 9 | 09 | வாலக்குமாரபிள்ளை தெரு | B |
| 10 | 10 | மல்லிசெட்டியார் தெரு | B |
| 11 | 11 | கருப்புகோவில் தெரு | B |
| **WardName:WARD-19** | | | |
| 1 | 01 | அருணாச்சலநாடார் தெரு | A |
| 2 | 02 | ஜவளிக்கடை தெரு -1 | A |
| 3 | 03 | ஜவளிக்கடை தெரு -2 | A |
| 4 | 04 | கருப்புகோவில் தெரு | B |
| 5 | 05 | மதுரை ரோடு -1 | A |
| 6 | 06 | மல்லிசெட்டியார் தெரு (1-2) | B |
| 7 | 07 | நாடார் புது தெரு | A |
| 8 | 08 | நகைக்கடை தெரு -1 | A |

| | | | |
|---|---|---|---|
| 9 | 09 | பழனிச்சாமி நாடார் தெரு | B |
| 10 | 10 | பேரையூர் ரோடு (கிழக்கு) | A |
| 11 | 11 | சத்தியசீலன் தெரு | A |
| 12 | 12 | சுந்தரம் செட்டியார் தெரு | A |
| 13 | 13 | வி.கே.எஸ். தெரு | A |
| 14 | 14 | வீரபுத்திரநாடார் தெரு (கிழக்கு) | A |
| 15 | 15 | ஆவடைச்செட்டியார் தெரு (மேற்கு) | A |
| 16 | 16 | விநாயகர்கோவில் தெரு | A |
| 17 | 17 | சுப்பிரமணி தெரு | A |
| 18 | 18 | ஆவடைதங்கநாடார் தெரு | A |
| 19 | 19 | சௌடம்மன்கோவில் தெரு | A |
| 20 | 20 | குருசாமி கோவில் தெரு | A |
| 21 | 21 | பாப்பு தெரு | A |
| 22 | 22 | ராஜா பிரஸ் தெரு | A |
| 23 | 23 | நந்தவனம் 1-வது தெரு | A |
| 24 | 24 | நந்தவனம் 2-வது தெரு | A |
| 25 | 25 | கவண்டன்பட்டி மெயின் ரோடு | A |
| **WardName:WARD-20** | | | |
| 1 | 01 | ஆவடைதங்கநாடார் தெரு | A |
| 2 | 02 | பழனிச்சாமிநாடார் தெரு | A |
| 3 | 03 | புதுத்தெரு | B |
| 4 | 04 | சுப்புசெட்டியார் தெரு | A |
| 5 | 05 | வைரலிங்கஆசாரி தெரு | A |
| 6 | 06 | விநாயகர்கோவில் தெரு | A |
| 7 | 07 | கவண்டன்பட்டி ரோடு | A |
| 8 | 08 | செல்வி மஹால் தெரு | A |
| 9 | 09 | செல்வி மஹால் 1-வது தெரு | A |
| 10 | 10 | விநாயகர் கோவில் 2-வது தெரு | A |
| 11 | 11 | ஆர்.கே. தேவர் தெரு | A |
| 12 | 12 | ஆனந்தாநகர் 1-வது தெரு | A |
| 13 | 13 | ஈ.பி. டிரான்ஸ்பார்மர் தெரு | A |
| **WardName:WARD-21** | | | |
| 1 | 01 | பேரையூர் ரோடு -1 (வடக்கு) | A |
| 2 | 02 | திருவள்ளுவர் நகர் | A |
| 3 | 03 | கவண்டன்பட்டி ரோடு | A |
| 4 | 04 | அர்பன் பேங்க் தெரு | A |
| 5 | 05 | கவண்டன்பட்டி ரோடு தெற்குத்தெரு | A |
| 6 | 06 | டி.ஆர்.எம்.எஸ். காம்பவுண்ட் | A |
| 7 | 07 | டி.ஆர்.எம்.எஸ். காம்பவுண்ட் 1-வது தெரு | A |

| | | | |
|---|---|---|---|
| 8 | 08 | டி.ஆர்.எம்.எஸ். காம்பவுண்ட் 2-வது தெரு | A |
| 9 | 09 | டி.ஆர்.எம்.எஸ். காம்பவுண்ட் 3-வது தெரு | A |
| 10 | 10 | டி.ஆர்.எம்.எஸ். காம்பவுண்ட் 4-வது தெரு | A |
| 11 | 11 | கனி தெரு | A |
| 12 | 12 | கவண்டன்பட்டி ரோடு தெற்கு தெரு-2 | A |
| 13 | 13 | கவண்டன்பட்டி ரோடு தெற்கு தெரு-3 | A |
| 14 | 14 | மண்ணெண்ணெய் குடோன் தெரு | A |
| 15 | 15 | அனுக்கிரஹம் மஹால் தெரு | A |
| 16 | 16 | டி.இ.எல்.சி. பள்ளி எதிர் தெரு | A |
| 17 | 17 | மூக்கையாத்தேவர் தெரு | A |
| **WardName:WARD-22** | | | |
| 1 | 01 | பேரையூர் ரோடு (தெற்கு) | A |
| 2 | 02 | ராமுத்தேவர் தெரு | A |
| 3 | 03 | எஸ்.டி.எ. பள்ளி தெரு | A |
| 4 | 04 | இராமத்தேவர் தெரு | A |
| 5 | 05 | இராமத்தேவர் 1-வது தெரு | A |
| 6 | 06 | இராமத்தேவர் 2-வது தெரு | A |
| 7 | 07 | இராமத்தேவர் 3-வது தெரு | A |
| 8 | 08 | இராமத்தேவர் 4-வது தெரு | A |
| 9 | 09 | இராமத்தேவர் 5-வது தெரு | A |
| 10 | 10 | இராமத்தேவர் 6-வது தெரு | A |
| 11 | 11 | இராமத்தேவர் 7-வது தெரு | A |
| 12 | 12 | பாரதியார் நகர் | A |
| 13 | 13 | பாரதியார் நகர் 2-வது தெரு | A |
| 14 | 14 | அண்ணா நகர் | A |
| 15 | 15 | அண்ணா நகர் 1-வது தெரு | A |
| 16 | 16 | அண்ணா நகர் 2-வது தெரு | A |
| 17 | 17 | அண்ணா நகர் 3-வது தெரு | A |
| 18 | 18 | அண்ணா நகர் 4-வது தெரு | A |
| 19 | 19 | அண்ணா நகர் 5-வது தெரு | A |
| 20 | 20 | மீனாம்பாள் நகர் மெயின் ரோடு | A |
| 21 | 21 | மீனாம்பாள் நகர் மெயின் ரோடு 1-வது தெரு | A |
| 22 | 22 | மீனாம்பாள் நகர் மெயின் ரோடு 2-வது தெரு | A |
| 23 | 23 | மீனாம்பாள் நகர் மெயின் ரோடு 3-வது தெரு | A |
| 24 | 24 | மீனாம்பாள் நகர் மெயின் ரோடு 4-வது தெரு | A |
| 25 | 25 | மீனாம்பாள் நகர் மெயின் ரோடு 5-வது தெரு | A |
| 26 | 26 | சீனிவாசா நகர்-1 | A |
| 27 | 27 | சீனிவாசா நகர்-2 | A |
| 28 | 28 | செல்வமாரியம்மன் கோவில் தெரு | A |

| | | | |
|---|---|---|---|
| 29 | 29 | மண்ணெண்ணெய் குடோன் தெரு | A |
| 30 | 30 | கவண்டன்பட்டி மெயின் ரோடு | A |
| **WardName:WARD-23** | | | |
| 1 | 01 | ஆசாரி தெரு | C |
| 2 | 02 | ஆண்டித்தேவர் தெரு (கவண்டன்பட்டி) | B |
| 3 | 03 | செட்டியார் தெரு | B |
| 4 | 04 | சின்னச்சாமிதேவர் தெரு | B |
| 5 | 05 | ஜி,எல்.ஆர். ரோடு | B |
| 6 | 06 | கவண்டன்பட்டி ரோடு | A |
| 7 | 07 | மொக்கச்சாமிதேவர் தெரு | B |
| 8 | 08 | நடுத்தெரு | B |
| 9 | 09 | சடைக்கருப்பத்தேவர் தெரு | B |
| 10 | 10 | சிவனான்டித்தேவர் தெரு | B |
| 11 | 11 | வீரத்தேவர் தெரு | B |
| 12 | 12 | பாண்டிகோவில் 1-வது தெரு | A |
| 13 | 13 | பாண்டிகோவில் 2-வது தெரு | A |
| 14 | 14 | பாண்டிகோவில் 3-வது தெரு | A |
| 15 | 15 | பாண்டிகோவில் 4-வது தெரு | A |
| 16 | 16 | பாண்டிகோவில் 5-வது தெரு | A |
| 17 | 17 | பாண்டிகோவில் 6-வது தெரு | A |
| 18 | 18 | பாண்டிகோவில் 7-வது தெரு | A |
| 19 | 19 | பாண்டிகோவில் 8-வது தெரு | A |
| 20 | 20 | பாண்டிகோவில் 9-வது தெரு | A |
| 21 | 21 | பாண்டிகோவில் மெயின் ரோடு | A |
| 22 | 22 | பாண்டிகோவில் தெற்கு 1-வது தெரு | A |
| 23 | 23 | பாண்டிகோவில் தெற்கு 2-வது தெரு | A |
| 24 | 24 | பாண்டிகோவில் தெற்கு 3-வது தெரு | A |
| 25 | 25 | பாண்டிகோவில் தெற்கு 4-வது தெரு | A |
| 26 | 26 | பாண்டிகோவில் வடக்கு 1-வது தெரு | A |
| 27 | 27 | பாண்டிகோவில் வடக்கு 2-வது தெரு | A |
| 28 | 28 | பாண்டிகோவில் வடக்கு 3-வது தெரு | A |
| 29 | 29 | பாண்டிகோவில் வடக்கு 4-வது தெரு | A |
| 30 | 30 | பாண்டிகோவில் வடக்கு 5-வது தெரு | A |
| 31 | 31 | கவண்டன்பட்டி மெயின் ரோடு 1-வது தெரு | A |
| 32 | 32 | கவண்டன்பட்டி மெயின் ரோடு 2-வது தெரு | A |
| 33 | 33 | பி.எஸ்.ஆர். அரிசி ஆலை | A |
| 34 | 34 | பி.எஸ்.ஆர். அரிசி ஆலை 2-வது தெரு | A |
| 35 | 35 | வீராகோவில் மெயின்ரோடு | B |

| | | | |
|---|---|---|---|
| 36 | 36 | வீராகோவில் மெயின்ரோடு 1-வது தெரு | B |
| 37 | 37 | வீராகோவில் மெயின்ரோடு 2-வது தெரு | B |
| 38 | 38 | கூல்சாம்பன் 1-வது தெரு | C |
| 39 | 39 | நீதிமன்றம் தெரு | A |
| **WardName:WARD-24** | | | |
| 1 | 01 | சின்னமூக்கன் தெரு | D |
| 2 | 02 | சொக்கலால் தேவர் தெரு | D |
| 3 | 03 | கூல்சம்பான் தெரு | D |
| 4 | 04 | ஜி.எல்.ஆர்.டேங்க் தெரு | D |
| 5 | 05 | கருப்பன்மாதாரி தெரு | D |
| 6 | 06 | மந்தை தெரு (கவண்டன்பட்டி) | D |
| 7 | 07 | மொக்காண்டிதேவர் தெரு | D |
| 8 | 08 | நடுத்தெரு | D |
| 9 | 09 | பெருமாள்கோவில் தெரு (கவண்டன்பட்டி | D |
| 10 | 10 | ராஜவடிவம் தெரு | D |
| 11 | 11 | தாதன்சம்பன் தெரு | D |
| 12 | 12 | திருவேட்டை தெரு | D |
| 13 | 13 | வீரபத்திரநாடார் தெரு | D |
| 14 | 14 | அம்மாவாசி பெரியகருப்பதேவர் தெரு | D |
| 15 | 15 | கவண்டன்பட்டி ரோடு | D |
| 16 | 16 | அம்பேத்கர் காலனி 1-வது தெரு | D |
| 17 | 17 | அம்பேத்கர் காலனி 2-வது தெரு | D |
| 18 | 18 | அம்பேத்கர் காலனி 3-வது தெரு | D |
| 19 | 19 | அம்பேத்கர் காலனி 4-வது தெரு | D |
| 20 | 20 | அம்பேத்கர் காலனி 5-வது தெரு | D |
| 21 | 21 | மயானம் தெரு | D |
| 22 | 22 | மயானம் குறுக்குத்தெரு | D |

1), 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2), 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3). 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4). 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5). வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6). தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7). காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8). ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு இணைப்பில் கண்டுள்ள தெருக்களில் மண்டலங்கள் மதிப்பில் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள் 01.04.2022—ன்படி நகராட்சிகள் சொத்துவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிமுறைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சுற்றறிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளதன்படி உசிலம்பட்டி நகராட்சியிலும் சொத்துவரி சீராய்வு செய்திட ஏதுவாக மன்றத் தீர்மானத்தினை இயற்றி சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1775/2021/அ1

**தீர்மானம் எண். 2**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்ற பொருள்:2**

இந்நகராட்சியின் 2022—23—ம் ஆண்டிற்கான வருவாய் மூலதன நிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதியின் உத்தேச வரவு செலவுத்திட்டம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:—**

மன்றம் பதிவு செய்யலாம்.

( ந.க.எண். 558/2014/பி1)

**தீர்மானம் எண். 3**

**தீர்மானம் : மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது**

---

**மன்ற பொருள்:3**

உசிலம்பட்டி நகராட்சி 11.12.1995—ம் தேதியிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி தற்போது 24 வார்டுகளை உள்ளடக்கி 13.85 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது ஆகும். இந்நகராட்சியின் மக்கள் தொகையானது 2011—ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 35219 ஆகும்.

உசிலம்பட்டி நகராட்சியில் மொத்தம் உள்ள 24 வார்டுகளிலும் 13784 குடியிருப்புகள் உள்ளது. இதில் 13496 எண்ணிக்கை செரிமானத்தொட்டி (Septic Tank) அமைந்துள்ளது. மேற்படி செரிமானத்தொட்டி நிறைந்திடும் பட்சத்தில் தனியார் வாகனங்கள் மூலம் நகரின் வெளிப்பகுதியில் பாதுகாப்பின்றி அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றது. உசிலம்பட்டி நகர்ப் பகுதியில் மழைநீர் வடிகால்களின் மொத்த நீளம் 47.42 ஆகும், மேலும் தெருக்கள் குறுக்கலாகவும், மேடும் பள்ளமாகவும் இருப்பதாலும் மழைநீர் மற்றும் கழிவு நீர் தங்குதடையின்றி செல்ல வழிவகை இல்லாத காரணத்தினால், கழிவுநீர் சீராக செல்ல போதுமான வசதி இல்லாத காரணத்தினால் ஆங்காங்கே தேங்கி பொது சுகாதார பாதிப்பு ஏற்படுத்தும் நிலை உள்ளது

மேலும் நகரில் தினசரி சேகரமாகும் 1.44mld கழிவு நீர் செல்ல போதுமான வசதி இல்லாத காரணத்தினால் அருகில் உள்ள கிராம ஊராட்சிகளில் போய் கலக்கிறது. இதனால் கிராம பகுதியிலும் சுகாதார பாதிப்பு ஏற்படுவதால் அடிக்கடி எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டு வருவதால் சட்டம் ஒழுங்கு பாதிக்கும் நிலை ஏற்படுகிறது.

பாதாள சாக்கடை திட்டம் மூலம் நகராட்சி பகுதிகளிலுள்ள வணிக நிறுவனங்கள் / வீடுகளில் உள்ள கழிவு நீர்த் தொட்டிகளில் சேகரமாகும் கசடு கழிவுகள் தனியார் வாகனங்கள் மூலம்

அகற்றப்படும் கழிவுநீர், பாதுகாப்பான முறையில் வெளியேற்ற ஏதுவாக சிறந்த கழிவுநீர் மேலாண்மை உறுதி செய்யயப்படும்.மேலும் தற்போது புதிதாக பொறுப்பேற்றுள்ள நகர் மன்ற தலைவர் அவர்களிடம் நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊர் பொது மக்களும் சேர்ந்து பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த புகார் தந்த வண்ணம் உள்ளனர், இதனை சரி செய்யும் நோக்கோடு பாதாள சாக்கடை திட்டத்தினை இந்நகராட்சியில் செயல்படுத்திட உரிய அனுமதி பெற வேண்டி கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை , அவர்களுக்கு அனுப்பி வைக்க கேட்டுக்கொண்டார்கள்.

மேலும் , இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திட உரிய சாத்திய கூறுகள் உள்ளனவா என ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க கோரி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தெரிவிக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி வேண்டிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 808/2022/இ1)

**தீர்மானம் எண். 4**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்:4**

உசிலம்பட்டி நகராட்சியில் குடிநீர் வழங்கும் அபிவிருத்தி திட்டம் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM) மூலம் கடன் மற்றும் மானியத்தொகை ரூ. 7303 இலட்சம் நகராட்சி நிதி ரூ.130 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ. 7433 இலட்சத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிர்வாக பொறியாளர் அவர்களின் கடிதம் எண். 6422 கோ.உசிலம்பட்டி/நி2/2022, நாள். 6.4.2022–இல் நகராட்சிகளில் பகிர்மான குழாய்கள் பதித்த போக விடுபட்ட இடங்களில் பகிர்மான குழாய்கள் பதிப்பதற்கு மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் அனுமதி கோரியுள்ளார்கள். அதுசமயம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 7433 இலட்சத்தில் IUDM 2017–18–ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் உசிலம்பட்டி நகராட்சிக்கென தனியாக குடிநீர் அபிவிருத்தி திட்டம் ஒதுக்கப்பட்டு, அதில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி திட்டத்தில் நகரில் உள்ள பல தெருக்களில் குடிநீர் விநியோக மெயின் பைப்லைன் பதிக்காமல் விடுபட்டுள்ளது. நகரில் அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் தங்கு தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக விடுபட்ட அனைத்து தெருக்களிலும் குடிநீர் விநியோக மெயின் பைப்லைன் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டில் செய்து கொடுக்கக்கோரி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை கேட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றலாம். மேலும், அதற்காகும் மொத்த செலவையும் ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.7433.00 இலட்சத்தில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.1857/2019/இ1

**தீர்மானம் எண். 5**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள் :5**

உசிலம்பட்டி நகராட்சி 24 வார்டுகள் மற்றும் 35219 (2011 மக்கள் தொகை) மக்கள் தொகை கொண்டதாகும். நகரில் மொத்தமுள்ள தெருவிளக்குகளின் எண்ணிக்கை 1460 ஆகும், மேற்படி தெருவிளக்குகள் அவ்வபோது ஏற்படும் பழுதுகளை சரி செய்து மின் விளக்குகள் எரிய விடப்படுகிறது. மின்சாதன உதிரி பாகங்கள் ஒரு ஆண்டுக்கு தேவையாக அளவு கொள்முதல் செய்ய தயார்

செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.80/—இலட்சம் ஆகும். மேற்படி மின்சாதன உதிரி பாகங்கள் கொள்முதல் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.806/2022/இ1

**தீர்மானம் எண். 6**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்ற பொருள் :6**

உசிலம்பட்டி நகராட்சி 24 வார்டுகள் மற்றும் 35219 (2011 மக்கள் தொகை) மக்கள் தொகை கொண்டதாகும். நகரில் 125 எண்ணம் ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க் அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு பிற உபயோக தேவைகளுக்கான தண்ணிர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.இவற்றில் அவ்வபோது ஏற்படும் மோட்டார் பழுது,பைப்புகள், வால்வுகள் மற்றும் இதர உபகரணங்கள் பழுதுகளை உடனடியாக மாற்றி பொது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரும் பொருட்டு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.80 /— இலட்சம் ஆகும். நகரின் பிற உபயோக பயன்பாட்டிற்குத் தேவையான தண்ணீர் கிடைக்க செய்ய வேண்டியதன் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.807/2022/இ1

**தீர்மானம் எண். 7**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்ற பொருள்:7**

உசிலம்பட்டி நகராட்சி 24 வார்டுகள் மற்றும் 35219 (2011 மக்கள் தொகை) மக்கள் தொகை கொண்டதாகும். நகரில் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் விநியோக குழாய்கள் மொத்த நீளம் 27.30.கிமீ ஆகும், மேற்படி குழாய்கள் பிவிசி குழாய்களாக இருப்பதாலும், பதிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆனதாலும் அவ்வபோது உடைப்பு ஏற்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் சீராக வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே இதனை சரி செய்யும் பொருட்டு பிவிசி உதிரிபாகங்கள் கொள்முதல் செய்யவும் அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.805/2022/இ1

**தீர்மானம் எண். 8**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்—8**

உசிலம்பட்டி நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு சாலை துண்டிப்புக்கட்டணத்தை முறைப்படுத்த, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/2008/குவ.2, நாள். 21.09.2009—இல் அறிவுறுத்தியுள்ளபடி, 2009—10—இல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சாலைத் துண்டிப்புக் கட்டண வகைப்படுத்தலை அடிப்படையாகக்கொண்டு ஆண்டுதோறும் 5 சதவிகிதம் உயர்வு செய்து வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் 2022—

2023ஆம் ஆண்டுக்கு கீழ்க்கண்ட அட்டவணைப்படி வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| சாலை துண்டிப்பு கட்டண அட்டவணை | | | | |
|---|---|---|---|---|
| | 2021–2022 | | 2022–2023 | |
| சாலை வகைகள் | 0-30 மீட்டர் | 31–60 மீட்டர் | 0-30 மீட்டர் | 31–60 மீட்டர் |
| மண்சாலை | 1888 | 2964 | 1982 | 3112 |
| தார் சாலை | 4041 | 5120 | 4243 | 5376 |
| சிமெண்ட் பேவர் பிளாக் | 4677 | 5745 | 4911 | 6032 |

**அலுவலக குறிப்பு:-**

மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண். 1623/2021/இ1)

**தீர்மானம் எண். 9**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள் :9**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 2652/2018/தி2, நாள். 11.03.2021–இன்படி இந்நகராட்சியில் பயன்பாட்டில் இல்லாத பழைய வாகனங்களை கழிவு நீக்கம் செய்து பொது ஏலத்தில் விட மதிப்பீடு தயார் செய்து வழங்கக்கோரி மண்டல துணை இயக்குநர், அரசு தானியங்கி பணிமனை, மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு மதிப்பீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | வாகன எண். | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TN 58 J 2547 (ஈப்பு) | 40000 |
| 2 | TN 58 B 8501 (சிறிய லாரி) | 60000 |
| 3 | TN 58 A 4486 (சிறிய லாரி) | 55000 |

மேற்படி மதிப்பீட்டின்படி ஏலம் கோரும் நபர்களின் பெயர் பட்டியல் வழங்கக்கோரி மண்டல துணை இயக்குநர், அரசு தானியங்கி பணிமனை மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் ஏலம் கோரும் நபர்களின் பெயர் பட்டியல் இல்லை என வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்படி பழைய வாகனங்களை கழிவு நீக்கம் செய்ய ஏலம் கோரவும், ஏல அறிவிப்பினை நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 610/2021/எச்.1)

**தீர்மானம் எண். 10**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள் : 10</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான வாகன எண் TN 58 BW1238 டிப்பர் லாரிக்கு வாகன காப்பீடு 25.03.2022 உடன் முடிவடைவதால் (26.03.2022 முதல் 25.03.2023 வரை) மேலும் ஓராண்டு காலத்திற்கு வாகன காப்பீடு புதுப்பிக்க பட்டியல் தொகை ரூ.39655/– யுனைடெட் இந்திய இன்சுரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தி வாகன காப்பீடு புதுப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

வாகன பராமரிப்பின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க எண் 168/2022/எச்1)

**தீர்மானம் எண். 11**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள் : 11</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆடு வதைச்சாலையில் வசூல் செய்யும் குத்தகை உரிமம் மற்றும் சாலையோர பலன்தரும் மரங்களில் பலன்களை அனுபவிக்கம் குத்தகை உரிமத்திற்கு 21.12.2021 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட விபரம் தினசரி நாளிதழில் செய்தி மக்கள்தொடர்பு அலுவலர் மூலமாக விளம்பரம் செய்ததற்கு தமிழ்ச்சுடர் நாளிதழிலிருந்து விளம்பரம் செய்த வகைக்கு ரூ.21,945–க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகை ரூ. 21945–யை தமிழ்ச்சுடர் நாளிதழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 1705/2020/அ1)

**தீர்மானம் எண். 12**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள் : 12</u>

15–வது நிதிக்குழு மான்யம் 2021–22–ஆம் ஆண்டுக்கான UNITED நிதி ரூ. 44.00/– இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தமிழ்ச்சுடர் நாளிதழில் 12.01.2022–இல் வெளியிட்டதற்கான தொகை ரூ. 21945/–ஐ ESS ESS Publication என்ற பெயரில் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது
(ந.க.எண். 2719/2022/இ1)

**தீர்மானம் எண். 13**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள் : 13</u>**

15–வது நிதிக்குழு மான்யம் 2021–22–ஆம் ஆண்டுக்கான UNITED நிதி ரூ. 54.29/– இலட்சம் மற்றும் 2021–22–ம் ஆண்டுக்கான TIED நிதி ரூ. 66.00/– மதிப்பீட்டிலான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தமிழ்ச்சுடர் நாளிதழில் 24.12.2021–இல் வெளியிட்டதற்கான தொகை ரூ. 30240/–யினை ESS ESS Publication என்ற பெயரில் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது

(ந.க.எண். 2719/2022/இ1)

**தீர்மானம் எண். 14**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள் : 14</u>**

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் உசிலம்பட்டி நகராட்சியை குப்பையில்லா நகராட்சியாக மாற்றிட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக உசிலம்பட்டி நகராட்சியை குப்பையில்லா நகராட்சியாக அறிவிக்கவும், மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குப்பையில்லா நகராட்சி சான்றிதழ் (garbage free city 3 Star) பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக பொதுமக்களின் ஆட்சேபணை மற்றும் கருத்துகளை பெற செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக மாவட்ட அளவில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு உரிய பட்டியல் தொகை ரூ. 9975/– (வரிகள் உட்பட) மதுரை மணி, தினசரி தமிழ் நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க எண் 1262/2017/எச்1)

**தீர்மானம் எண். 15**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள் : 15</u>**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உசிலம்பட்டி நகராட்சி திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (Open defecation free) தொடர்ந்து அத்தகைய நிலையே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து நகரின் எந்த ஒரு பகுதியிலும் திறந்த வெளியில் மலம்/ சிறுநீர் கழிப்பது கண்டறியப்படவில்லை எனவும், நகரில் உள்ள அனைத்து சமுதாய/பொது கழிப்பிடங்கள் தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருவாதால் உசிலம்பட்டி நகராட்சியை திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக (ODF +) அறிவிக்க பொதுமக்களின் ஆட்சேபணை மற்றும் கருத்துகளை பெற செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக மாவட்ட அளவில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு உரிய பட்டியல் தொகை ரூ. 16800 /– (வரிகள் உட்பட) M/S ESS ESS Publication நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க எண் 1262/2017/எச்1)

**தீர்மானம் எண். 16**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

நகர்மன்ற தலைவர்,
உசிலம்பட்டி நகராட்சி.